# இடம்பெயர்ந்த நபர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்தல் - 2015

2013 இன் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க இடம்பெயர்ந்த வாக்காளர்களைப் பதிவு செய்தல்.

அண்மைக்காலத்தில் பயங்கரவாத போராளிகளின் அல்லது வேறு குழுக்களின் ஏதேனுமொரு நடவடிக்கைகளின் பயனாக 2009 மே மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் தான் நிரந்தரமான வசித்த தேர்தல் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தும், அதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த ஏதேனுமொரு வருடத்திற்கான தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டிருந்தும், 2009 ஆம் ஆண்டின் பின்னர் தீவின் எந்தவொரு தேருநர் இடாப்பிலும் தனது பெயர் உட்சேர்க்கப்படாதவர்களுமான ஆட்களுக்கு 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தனது பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் மேற்கூறப்பட்ட விசேட ஏற்பாடுகள் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2014.11.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2014.11.07 ஆந் திகதி முடிவடையவுள்ளன. 2014.11.07 ஆந் திகதி வரையில் கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப்பத்திரங்களுக்கிணங்க தகைமைப் பெறும் உரிமைக் கோரிக்கையாளர்களின் நிரலொன்று தயாரிக்கப்பட்டு 2014.11.08 ஆந் திகதி காட்சிப்படுத்தவும், மேற்கூறப்பட்ட உரிமைக் கோரிக்கையாளர்களின் நிரலில் பெயர் காணப்படாதவர்கள் அன்றைய நாளிலிருந்து ஒருவார காலப்பகுதியினுள் அந்தந்த பதிவு செய்யும் அலுவலர்களுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவுமுள்ளன.

இது தொடர்பாக தாங்கள் அறிந்துகொள்வதற்காக கீழ்க்காணும் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்பட்டுள்ளன.

I. இடம்பெயர்ந்தவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தின் பிரதியொன்று
II. விண்ணப்பப்பத்திரத்தை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்துரைப் பத்திரத்தின் பிரதியொன்று

மேற்குறித்த சிறப்பேற்பாடுகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கமைய மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பிரசை ஒருவரின் பிள்ளையொருவரும்,

I. உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த திகதியன்று பதினெட்டு வயதை எய்தியிராதவர்களும் அத்துடன் விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்பு தொடர்பில் மீளாய்வு எத்திகதியன்று தொடங்கியதோ அத்திகதியன்று பதினெட்டு வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களும்.
II. அத்தகைய பிரசை உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த பின்னர் பிறந்தவரும் மற்றும் விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில் நடைமுறையிலிருந்த இடாப்புத் தொடர்பில் மீளாய்வு எத்திகதியிலிருந்து தொடங்கியதோ அத்திகதியன்று பதினெட்டு வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களும்: அத்துடன்
III. 2009 ஆம் ஆண்டின் பின்னரான நடைமுறையிலுள்ள ஏதேனும் இடாப்பில் அவரது பெயர் பதிவு செய்யப்பட்டிராதவராகவுள்ளவர்களுமான ஆட்களும் பதிவு செய்து கொள்ள முடியும்.

எதிர்வரும் 2015ஆம் வருடத்தில் நடாத்தப்படவுள்ள அனைத்து தேர்தல்களின் போதும் பயன்படுத்தப்படவுள்ளமை 2014 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலே ஆகும். எனவே, தாமதமின்றி உங்களது பதிவை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவும். மேலதிக தகவல்களுக்கு http://cmev.wordpress.com/ என்ற இணையத்தை நாடவும். இல்லை எனில் தேர்தல்கள் செயலகத்தை தொடர்பு கொள்ளவும். (0112-868441, 0112868442, 0112-868443)

மஞ்சுள கஜநாயக
இணைப்பாளர்